இணைப்பு 1.

விடை—

(875 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 482-க்கான விடையைக் காண்க.)

(அ) ஆம். திரைப்பட நிதி உதவி நிறுவனம் (The Tamil Nadu Film Finance Corporation) ஏற்படுத்தும் வகையில் 28—8—1981-ம் தேதியிட்ட அரசு ஆணை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. இந்த நிதி நிறுவனம், முறைப்பட செயல்படுத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

(ஆ) மத்திய அரசு அமைத்துள்ள திரைப்பட அபிவிருத்திக் கழகம், மற்றும் கேரளா, ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் அமைந்துள்ள திரைப்பட அபிவிருத்திக் கழகம் ஆகியவற்றின் அமைப்பினைப் போல தமிழகத்திலும் "தமிழ்நாடு திரைப்பட நிதி நிறுவனம்" அமைக்கும் வகையில் அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தின் தலைமை அலுவலகம் சென்னையில் இருக்கும். ஒவ்வொரு பங்கும் ரூபாய் நூறு மதிப்புள்ள இரண்டு லட்சம் பங்குகள் கொண்ட ரூபாய் இரண்டு கோடி ஒப்பிய முதல் (Authorised Capital) மற்றும் ரூபாய் ஐம்பது லட்சம் நடை முதலுடன் (Working Capital) இந்த நிறுவனம் இயங்கும். இந்நிறுவனத்தின் இயக்குநர் குழு அமைப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. நிறுவன அமைப்பு விதிக் குறிப்புகள் (Memorandum of Association) நிறுவன விதிகள் (Articles of Association) ஆகியவை அச்சிடும் பணி தனியே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இக்கழகம் பதிவு பெறுவது சம்பந்தமான பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. பதிவு பெற்றதும், ஆரம்ப விழாவிற்குப் பிறகு, முறைப்பட செயல்பட ஆரம்பிக்கும். நல்ல படங்களை உருவாக்கும் திறமையிருந்தும் நிதி வசதியின்மை காரணமாக, தரமான படங்களைத் தயாரிக்க முடியாத நிலையில் இருக்கும் திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு உதவிநிதி அளிப்பது இந்தக் கழகத்தின் நோக்கமாகும்.